1973 மார்ச் 5]

திரு. த. சோனேயா : தலைவரவர்களே, சென்னைக்கும் திருப்பதிக்கும் துரித வண்டிகளை விடுவது இப்பொழுது இல்லை என்றாலும், சென்னைக்கும் திருப்பதிக்கும் ஏராளமான பக்தர்கள். பல்லாயிரக்கணக்கான பக்தர்கள், ஏன் லட்சோப லட்சம் மக்கள் சென்று வருவதால் அங்கே துரித வண்டிகளை விடுவதன் மூலம் வருவாயும் கிடைக்கும், வசதிகளும் ஏற்படும். ஆகவே இந்த இரண்டையும் மனத்திற்கொண்டு அந்த வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்தக் கேள்வி சென்னையிலிருந்து நேரடி திருப்பதி வரையிலேயும் செல்லுகின்ற பஸ்கள் திருப்பதி மலைமேலும் செல்லக்கூடிய அளவில் சிறிய பேருந்துகளாக விடப்படுமா என்பது மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்ததைப்போல், பல்லாயிரக்கணக்கான மக்கள், என் லட்சக்கணக்கான மக்கள் செல்ல நம்முடைய அரசின் சாப்பிலே 6 பஸ்களும், ஆந்திர அரசின் சாப்பிலே 6 பஸ்களும் ஆக 12 பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன.

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, திருப்பதி கோயிலுக்கு யாத்திரை செல்லக்கூடியவர்கள் இன்னும் அதிகமாக ஆக வேண்டும். அப்படிச் செல்லுகின்றவர்கள் போதிய போக்கு வரத்து வசதியின்மையால் கஷ்டப்படுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படித் தெரிந்த பிறகும் சிறிய பஸ்களை விடுவதில் என்ன கஷ்டம் இருக்கிறது? ஏன் அதை விரைவில் விடக்கூடாது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சிறிய பஸ்கள் விடுவதாலே போதுமான பயணிகள் செல்வதற்கு வாய்ப்பு ஏற்படுவதில்லை. ஆகவே, சாதாரணமாக பெரிய பேருந்து களே திருப்பதிக்குச் செல்ல வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக் கிறோம். திருப்பதி தேவஸ்தானத்தைப் பொறுத்தவரையில் மலை யிலே அவர்கள் ஏற்றிச் செல்கிறார்கள். ஆனால் ஆந்திரப் பிரதேசத்தின் போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் இந்த பஸ்கள் நேராகச் செல்வதற்கு ஏற்பாடு செய்து வருவதாக என்னிடத்திலே கொஞ்ச நாட்களுக்கு முன்னால், அதாவது முல்கி போராட்டம் நடப்பதற்கு முன்னால் சொன்னார்கள். இன்னொரு வழிப்பாதை தயாராக இருப்பதால் ஒருவழிப்பாதைக்கு ஏற்பாடு

செய்தால், இந்தப் பெரிய பேருந்துகள் திருப்பதி திருமலை வரையில் செல்வதற்கு வாய்ப்பு வசதிகள் ஏற்படும். அந்த வகையில் அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know whether the proposal to introduce a bus route from Thirupathi to Bangalore via Hosur will be expedited?

THE HON. THIRU S. RAMACHANDRAN : As such I have no information; but I think there is such a proposal with the Government.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, இப்பொழுது 6 பஸ்கள் ஓடுகின்றன என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். ஒரு பஸ்ஸுக்கு சராசரி வருவாய் எவ்வளவு என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அந்த விவரங்கள் என்னிடத்திலே இல்லை. ஆனால் இலாபத்திலே ஓடுகிறது.

நகரப் பேருந்துகளில் குறட்பாக்கள்

* 248 வினா—புலவர் சி. பழனிச்சாமி : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகரப் பேருந்துகள் சிலவற்றில் எழுதப்பட்டுள்ள திருக்குறட்பாக்கள் பிழையாக எழுதப்பட்டுள்ளன என்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், அவைகளைத் திருத்துவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) சில அச்சுப் பிழைகள் துறையின் நாட்டத்திற்குக் கொண்டு வரப் பட்டன. இப்பிழைகள் திருத்தப் பட்டு குறட்பாக்கள் மீண்டும் அச்சிடப்பட்டன.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவரவர்களே, வண்ணாரப்பேட்டை பணிமனையைச் சேர்ந்த நகரப்பேருந்து ஒன்றில், " இன்னா செய் தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல் " என்ற